Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, OCTOBER 02, 2024

புதன்கிழமை ஒக்டோபர் 02, 2024 | ஒளி: 10 கதிர்: 063 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

# “ரணில் பதவி விலக வேண்டும்”

பொதுத் தேர்தலைக் கருத்தில் கொண்டு தமது கட்சியுடன் கூட்டணியமைக்க வேண்டுமென்றால் அதற்கு நிபந்தனையாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க பதவி விலக வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்துகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியினர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவதை விட ஐக்கிய தேசியக் கட்சியினர் அனைவரும் எஸ்.ஜே.பியில் இணைய வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

“கட்சித் தலைவர் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்க விரும்பும் ஒரு சிலர் சிறிகொத்தாவில் ஒரு சில கட்சி உறுப்பினர்களுடன் இருக்கட்டும், மற்றவர்கள் எங்களுடன் சேர வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு இப்போது சிறந்த இடம் எஸ்.ஜே.பி. அத்துடன் தற்போதைய தலைவர் ரணில் விக்ரமசிங்க பதவி விலகி கட்சியை எங்களிடம் ஒப்படைத்தால் ஐக்கிய தேசியக் கட்சியைக் கைப்பற்ற நாங்கள் தயாராக உள்ளோம்.

திரு.விக்ரமசிங்கவிடம் தலைமைப் பதவியை ராஜினாமா செய்யுமாறு பலமுறை கூறியும் அவர் கோரிக்கையைச் செவிசாய்க்கவில்லை. விக்ரமசிங்க வெளியேறினால் ஐக்கிய தேசியக் கட்சியைக் கைப்பற்றுவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம், ஆனால் அது எமக்கு வழங்கப்படுமா என்பதில் சந்தேகம் உள்ளது என ராஜகருணா ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், அடிமட்ட மட்டத்திலிருந்து திரு.விக்ரமசிங்கவைத் தலைமைப் பொறுப்பில் நீடிக்க வேண்டும் என்று தீர்மானங்களைப் பெறுவதற்கான செயல்முறை ஏற்கனவே தொடங்கியுள்ளது. இது வார இறுதியில் காலி மாவட்டத்தில் ஆரம்பமானது. தொடர்ச்சி P2





# பஸ் கட்டணம் குறைப்பு

பஸ் கட்டணத்தை 4.24 சதவீதத்தால் குறைக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. எரிபொருள் விலை குறைக்கப்பட்டதையடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த விலை குறைப்பு செவ்வாய்க்கிழமை (01) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் என்று அறிவித்துள்ளது. தொடர்ச்சி P2




# “புதிய அரசியலமைப்பின் ஊடாக தீர்வு வழங்குவோம்”

ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்து விட்டது. புதிய ஜனாதிபதி நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்ற தேர்தல் நடைபெறவிருக்கின்றது. அதில் அதிகாரத்தைப் பெற்றதன் பின்னர், புதிய அரசியலமைப்பு தயாரிக்கப்பட்டு, மக்களின் ஆணையுடன் நிறைவேற்றப்படும். அதில், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. தொடர்ச்சி P2

# மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வேண்டும்

**இலங்கை செல்லும் ஜெய்சங்கரிடம் ராமதாஸ் கோரிக்கை**





“இன்றைய நிலையில் தமிழக மீனவர்கள் 162 பேர் கைது செய்யப்பட்டு இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரையும் விடுதலை செய்யும்படியும், மீனவர் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காணக் கூட்டுப் பணிக்குழுவை அமைக்கும்படியும், இலங்கை செல்லும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் வலியுறுத்த வேண்டும்” என்று பாட்டாளி மக்கள் கட்சியின் (பாமக) நிறுவுனர் ராமதாஸ் கூறியுள்ளார். தொடர்ச்சி P2

# ஜனாதிபதியை சந்தித்தார் ஜூலி



ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஜே சங்கிற்கும் இடையிலான சந்திப்பு செவ்வாய்க்கிழமை (01) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, இலங்கையின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற அநுரகுமார திசாநாயக்கவிற்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்த அமெரிக்கத் தூதுவர், அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான இருதரப்பு உறவுகளைத் தொடர்ந்தும் மேம்படுத்துவது குறித்துக் கலந்துரையாடினார்.

அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள், பொருளாதார மற்றும் சமூக ஒத்துழைப்பை வலுப்படுத்தல், இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர ஆர்வமுள்ள துறைகள் குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

# புலமைப்பரிசில் விடைத்தாள் மதிப்பீடு பணி இடைநிறுத்தம்

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் விடைத்தாள்களை மதிப்பிடும் பணிகளை, இரண்டு வாரங்களுக்கு இடைநிறுத்துமாறும் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க, உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும், 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் வினாத்தாள் பிரச்சினை தொடர்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவந்த பெற்றோர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று திங்கட்கிழமை (30) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. தொடர்ச்சி P2

# புட்டினின் வாழ்த்துடன் ஜனாதிபதியை சந்தித்தார்



இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் லெவன் எஸ்.ஜகார்யன் (Levan S. Dzhagaryan) செவ்வாய்க்கிழமை (01) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவை சந்தித்தார்.

இந்த சந்திப்பில் புதிதாக தெரிவான ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கு தூதுவர் எஸ்.ஜகார்யன் தனது வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் தனிப்பட்ட வாழ்த்துச் செய்தியொன்றையும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கு வழங்கினார். தொடர்ச்சி P2

# ஜனாதிபதியின் பெயரை சொல்லி குழப்பிய நபர்

■ க.அகரன்

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் செவ்வாய்க்கிழமை (01) முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தினை ஜனாதிபதி அனுரவின் ஆதரவாளர் எனக்கூறிய நபர் ஒருவர் குழப்பியமையால் பதட்டமான நிலைமை ஏற்பட்டது.

சர்வதேச சிறுவர் தினத்தன்று காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வவுனியா பழைய பேருந்து நிலையப் பகுதியில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, அந்த இடத்திற்கு வந்த இனம் தெரியாத நபர் ஒருவர், “இது அனுரவின் ஆட்சி, நீங்கள் எல்லாம் வயிறு வளர்க்கிறீர்கள். உங்களுக்குப் பணம் வருகின்றது. என போராட்டத்தில் ஈடுபட்ட தாய்மாருடன் முரண்பாட்டில் ஈடுபட்டுள்ளார். உங்களை பொலிஸில் பிடித்து கொடுப்பேன். நான் அனுரகுமாரவுடனேயே இரு வருடமாக நிற்கிறேன். தொடர்ச்சி P2



# “அரகலய தாக்குதலாலேயே மரணம்”

‘அரகலய’ குழப்பத்தின் போது, ஏற்பட்ட காயங்களினாலேயே நவ லங்கா நிதஹஸ் கட்சி தலைவர் குமார வெல்கம மரணமடைந்தார் என முன்னாள் எம்.பியான பியல் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

“கடந்த 2022ஆம் ஆண்டு மே 9ஆம் திகதி அரகலயவை ஆரம்பித்தவர்கள், வெல்கமவை கடுமையாக தாக்கியுள்ளனர். இதன்போது, அவருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டன. இந்த காயங்கள் காரணமாக அவர் உடல் நலக்குறைவு ஏற்பட்டு அவ்வப்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்” என திங்கட்கிழமை (30) மாலை இடம்பெற்ற அன்னாரின் இறுதி சடங்கில் கலந்து கொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பியல் நிஷாந்த தெரிவித்தார்.



# “பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்”

**இந்திய உயர்ஸ்தானிகரிடம் தமிழ் கட்சிகளின் பிரநிதிகள் வலியுறுத்தல்**

இலங்கையின் எந்த ஆட்சியாளர்கள் மீதும் எங்களுக்கு (தமிழர்கள்) நம்பிக்கை இருந்ததில்லை. அதேபோல், தற்பொழுது ஆட்சிக்கு வந்திருப்பவர்கள் புதியவர்கள். ஆகவே, அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஆட்சியாளர்கள் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவார்கள் என்று கூறினாலும் அதனைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும் என்று தமிழ்த் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தியிருப்பதுடன், வடக்கு கிழக்கு மாகாணத்தில் இந்தியா முன்மொழிந்திருந்த முன்னெடுத்திருந்த அபிவிருத்தி திட்டங்களை எந்த தடையுமில்லாமல் முன்னெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், புதிய ஜனாதிபதியுடன் வேலை செய்வதற்கு இந்தியா ஆயத்தமாயிருக்கிறது என்றும் இந்தியாவுக்கும் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவுக்குமிடையில் சிறந்த நட்புறவு இருப்பதாகவும் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தமிழ்த் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்ததுடன்,பொதுத் தேர்தலின் பின்னர் புதிய அரசாங்கத்துடன் வேலை செய்வதற்கு இந்தியா ஆர்வமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிற்கும் தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்களுக்குமிடையில் கொழும்பில் திங்கட்கிழமை (30) மாலை சந்திப்பொன்று நடைபெற்றது. தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “ரணில் பதவி விலக வேண்டும்”



இதேவேளை, பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு பொது எதிரணிக் கூட்டணியை உருவாக்குவதே சிறந்த வழி என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

“பொதுத் தேர்தலில் பொதுச் சக்தியாகப் போட்டியிடுவதற்கு எதிர்க்கட்சிகள் மத்தியில் ஒருமித்த கருத்தை ஏற்படுத்த முடியுமா என்பதைப் பார்ப்போம். பொது எதிரணிக் கூட்டமைப்பை உருவாக்குவதே நாட்டைப் பொறுத்தமட்டில் சிறந்த தெரிவாகும், நாங்கள் அதைத் தொடர்வோம்” என்று திரு. அபேவர்தன ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

“ஏழு தசாப்தங்களில் முதன்முறையாகப் பிரதான எதிர்க்கட்சி அதிகாரத்தைப் பெறத் தவறிவிட்டது. இத்தகைய சூழ்நிலையில் பொதுக் கூட்டணி அமைப்பதே இப்போது இருக்கும் சிறந்த வழி. இந்த இலக்கை அடைய முடியுமா என்பதைப் பார்த்துவிட்டு, பொதுத் தேர்தலில் எப்படிப் போட்டியிடப் போகிறோம் என்பதைத் தெரிவிப்போம்” என்றார்.



# பஸ் கட்டணம் குறைப்பு

அதன்படி, ஆரம்ப கட்டணம் 27 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருட்களின் விலையை, செப்டெம்பர் 30ஆம் திகதி நள்ளிரவு முதல் குறைத்துள்ளது.

இதன்படி, இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம், ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையை 21 ரூபாவினால் குறைத்து 311 ரூபாவாக நிர்ணயித்துள்ளது.

அதேநேரம், ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 24 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 283 ரூபாவாகும்.

அத்துடன், சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 33 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, அதன் புதிய விலை 319 ரூபாவாகும். அதேநேரம், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 19 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

ஒக்டேன் 95 ரக பெற்றோலின் விலை 377 ரூபாய் என்ற விலையிலேயே மாற்றமின்றி தொடரும் எனவும் இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், இலங்கை கனிய வளக் கூட்டுத்தாபனத்தின் விலை திருத்தங்களுக்கு ஏற்ப லங்கா ஐ.ஓ.சி. நிறுவனமும் தமது எரிபொருட்களின் விலையைத் திருத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வேண்டும்





இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில், “இலங்கையின் புதிய ஜனாதிபதியாக அனுரகுமார திசாநாயக்க, பொறுப்பேற்ற பிறகு, முதல் வெளிநாட்டுத் தலைவராக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் வரும் 4ம் திகதி இலங்கை செல்கிறார். இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்குடன் அவர் மேற்கொள்ளவிருக்கும் இந்தப் பயணம் அங்குள்ள தமிழர்களுக்குப் பயனும், அதிகாரமும் அளிக்கும் வகையில் அமைய வேண்டும்.

இலங்கைப் போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் ஆகும் நிலையில், அங்கு நிகழ்த்தப்பட்ட கொடிய போர்க் குற்றங்களுக்குக் காரணமானவர்கள் எவரும் இதுவரை தண்டிக்கப்படவில்லை. இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட 13ஆம் திருத்தத்தின்படி தமிழர்களுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தினாலும் கூட எந்தப் பயனும் ஏற்படவில்லை.

இத்தகைய சூழலில் இலங்கை செல்லும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் குறித்த ஐநா மனித உரிமை ஆணையத்தின் விசாரணைக்கு முழுமையாக ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று வலியுறுத்த வேண்டும்.

13ஆம் அரசியல் சட்டத் திருத்தத்தின்படி தமிழர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட அதிகாரப் பரவல் என்பது மிக மிகக் குறைவானது தான் என்றாலும் கூட, அதுவும் கூட 35 ஆண்டுகளாகச் சாத்தியமாகவில்லை. கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையை ஆட்சி செய்த கட்சிகள் அல்லாத புதிய கட்சியைச் சேர்ந்த ஒருவர் ஜனாதிபதியாகியுள்ள நிலையில், ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும், வடகிழக்கு மாநிலங்களில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும், பிரிக்கப்பட்ட வடக்கும் மற்றும் கிழக்கு மாநிலங்களை இணைந்து தேர்தல் நடத்த வேண்டும் ஆகிய கோரிக்கைகளையும் நிறைவேற்றும்படி இலங்கை ஜனாதிபதியை அமைச்சர் ஜெய்சங்கர் கண்டிப்புடன் வலியுறுத்த வேண்டும்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இன்றைய நிலையில் தமிழக மீனவர்கள் 162 பேர் கைது செய்யப்பட்டு இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரையும் விடுதலை செய்யும்படியும், மீனவர் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காணக் கூட்டுப் பணிக்குழுவை அமைக்கும்படியும் இலங்கை அதிபரை வலியுறுத்த வேண்டுமென்று வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரைக் கேட்டுக் கொள்கிறேன்” என்று அவர் கூறியுள்ளார்.

# மதிப்பீடு பணி இடைநிறுத்தம்

இதன்போது, 5 ஆண்டு புலமைப்பரிசில் விடைத்தாள் மதிப்பிடும் பணிகளை இரு வாரங்களுக்கு இடைநிறுத்துமாறு ஜனாதிபதி உரிய அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் 3 கேள்விகள் அன்றி 8 கேள்விகள் பரீட்சைக்கு முன்பாகவே வெளியாகி இருந்ததெனவும், அந்தப் பரீட்சையை மீண்டும் நடத்துமாறும் பெற்றோர்கள், ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

# புட்டினின் வாழ்த்துடன்...



ஜனாதிபதி அநுர திசாநாயக்கவின் தலைமையில் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் மேலும் வலுவடையும் என எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி புடின் தனது செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான நீண்ட கால இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடலில் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், இராஜதந்திர உறவுகளை பரஸ்பரம் மேம்படுத்துவதற்கு இரு தரப்பினதும் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவதுடன், வர்த்தகம், முதலீடு, கலாசாரம் மற்றும் கல்வி போன்ற முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் இரு தரப்பினரும் வலியுறுத்தினர்.

# “பொறுத்திருந்துதான்...

இந்த சந்திப்பில், நடைபெற்று முடிந்துள்ள ஜனாதிபதித் தேர்தலின் நிலைவரங்கள் மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் கள நிலைவரங்கள், நாட்டினுடைய பொருளாதார நிலைமைகள் மற்றும் தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினை தீர்வில் புதிய அரசாங்கம் எவ்வாறு செயற்படும் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

மேற்படி சந்திப்பில், தமிழ்த் தேசிய கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி தமிழரசுக் கட்சி சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராஜா, செயலாளர் ப.சத்தியலிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் மற்றும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவர் தருமலிங்கம் சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் (டெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த சந்திப்பு தொடர்பில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில்,

“இலங்கையின் எந்த ஆட்சியாளர்கள் மீதும் எங்களுக்கு (தமிழர்கள்) நம்பிக்கை இருந்ததில்லை.தற்பொழுது ஆட்சிக்கு வந்திருப்பவர்கள் புதியவர்கள். ஆகவே அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஆட்சியாளர்கள் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவார்கள் என்று கூறினாலும், அதனைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். அதேபோல், தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) மார்க்சிய கொள்கையைக் கொண்டவர்கள். இவர்களுக்கு நாட்டினுடைய பொருளாதாரத்தை முன்னுக்குக் கொண்டு செல்லவேண்டிய மிக முக்கியமானதொரு பிரச்சினையும் இருக்கிறது. அதனை இவர்களால் எந்தளவுக்குச் சாத்தியமாக்க முடியும் என்ற கேள்வியும் இருக்கிறது. காரணம், உலக நாடுகள் இவ்வாறான கொள்கையுடையவர்களுடன் எவ்வளவு தூரம் நெருங்கிப்போகும் என்ற ஒரு கேள்வியும் இருக்கிறது என நாங்கள் இந்திய உயர்ஸ்தானிகரிடம் எடுத்துக்கூறினோம் என்றார்.




# “புதிய அரசியலமைப்பின் ஊடாக தீர்வு வழங்குவோம்”

அரசாங்க தகவல் திணைக்களத்தில், செவ்வாய்க்கிழமை (1) நடைபெற்ற, வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே, அமைச்சரவையும் அமைச்சரவை பேச்சாளருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு மக்களிடம் கொண்டுசெல்லப்படும். மக்களின் ஆணையுடன் நிறைவேற்றப்படும் என்றார். இதேவேளை, ஒக்டோபர் 2ஆம் திகதியன்று வருகைதரவிருக்கும் சர்வதேச நாணய நிதியத்துடன் நடத்தப்படவிருக்கும் பேச்சுவார்த்தை தொடர்பில், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில், முதலாவதாக (30.09.2024) அன்று கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் புதிய தீர்மானங்கள் எடுக்கவில்லை என்றார்.

அரசியல் பலம் மற்றும் விசுவாசத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களை மீள அழைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த அறிக்கையின் அடிப்படையில் அரசியல் நியமனம் பெற்றவர்களின் பதவிகள் மீளப் பெறப்படும் என அவர் கூறினார். ”எம். பிக்களின் பல மகன்கள் மற்றும் மகள்களுக்கு இராஜதந்திர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன,” என்று அவர் கூறினார்.

எவ்வாறாயினும், இலங்கை இராஜதந்திரிகள் எவரும் உடனடியாக மீள அழைக்கப்பட மாட்டார்கள் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.


# ஜனாதிபதியின் பேயரை சொல்லி குழப்பிய நபர்

பொலிஸூம் புலனாய்வு பிரிவும் வந்து இப்போது உங்களைக் கைது செய்வார்கள். நாய்களே எல்லாரும் வீடு செல்லுங்கள் என்று ஒருமையில் கண்டபடி திட்டியுள்ளார். இதனையடுத்து காணாமல் போன உறவுகளும் அவருடன் முரண்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் குறித்த பகுதியில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளதுடன், சிறிது நேரத்தின் பின்னர் குறித்த நபர் அவர்களை அச்சுறுத்தியபடி அந்த பகுதியில் இருந்து கலைந்து சென்றுள்ளார்.








# முத்திரைகள் கண்காட்சி

முத்திரைகள், பழைய நாணயங்கள், நாணயத்தாள்கள் கண்காட்சி இலங்கை சுதந்திர தபால் சங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பு பொது நூலகத்தில் திங்கட்கிழமை(01) ஆரம்பமானது.












# முதலாவது அமைச்சரவை தீர்மானங்கள்

புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான மூன்று அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவையின் முதலாவது கூட்டம் 2024.09.30 அன்று இடம்பெற்றது அதில் எட்டப்பட்ட முடிவுகள்

### 01. 2024ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு நிதி ஒதுக்கீடு

இலங்கையின் 9ஆவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளதுடன், 2024.11.14 ஆம் திகதி பாராளுமன்ற பொதுத்தேர்தலை நடாத்துவதற்கு திகதி குறித்தொதுக்கப்பட்டுள்ளது. ஆனாலும், 2024 வரவு-செலவுத் திட்டத்தில் பாராளுமன்ற பொதுத்தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படவில்லை.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் பாராளுமன்ற பொதுத்தேர்தலை நடாத்துவதற்காக திரட்டு நிதியத்திலிருந்து நிதியை விடுவிப்பதற்கு அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டுக்கான திரட்டு நிதியத்திலிருந்து 05 பில்லியன் ரூபாய்களை விடுவிக்கப்பட்டது.

அத்துடன், பொதுத் தேர்தலை நடத்துவதற்கு ஏற்புடைய 2025 ஆம் ஆண்டில் ஈடுசெய்யப்பட வேண்டிய செலவான 06 பில்லியன் நிதி ஒதுக்கீட்டை 2025ஆம் ஆண்டின் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் இடைக்கால நிறைவேற்றுக் கணக்கின் மூலம் ஒதுக்கி வழங்குவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 02. சிறப்புரிமைகளில் மீள்கவனம் செலுத்துதல்

மக்களுடைய வாக்குகளால் நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, அமைச்சர்களுக்கு மற்றும் முன்னாள் ஜனாதிபதிமாருக்கு சம்பளம், கொடுப்பனவு, ஓய்வூதியம், உத்தியோகபூர்வ இல்லம், வாகனங்கள், பணியாட்குழாம், அலுவலக உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் போன்ற பல்வேறு உரித்துக்கள், கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. குறித்த உரித்துக்கள், கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளை வழங்குவதற்காக மக்களுடைய வரிப்பணத்திலிருந்து அரசு குறிப்பிடத்தக்களவு செலவை வருடாந்தம் மேற்கொள்கின்றது. தற்போதுள்ள அரச நிதியில் மேற்படி அதிகளவான செலவுகளைக் குறைக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, அது தொடர்பான விடயங்களை ஆராய்ந்து திறைசேரிக்கு தேவையற்ற செலவுச் சுமைகளை ஏற்படுத்துகின்றதும் மற்றும் தர்க்கரீதியற்ற

உரித்துக்கள், கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளை தர்க்கரீதியான முறையில் மட்டுப்படுத்துவதற்கு அல்லது மாற்று முறைகளை அறிமுகப்படுத்துவதற்குப் பொருத்தமான விதந்துரைகளுடன் கூடிய விபரமான அறிக்கையை இரண்டு (2) மாதங்களில் சமர்ப்பிப்பதற்காகக் கட்டமைப்புடன் கூடிய குழுவொன்றை நியமிக்கப்பட்டுள்ளது.

* கே.ரீ.சித்திரசிறி-(தலைவர்) ஓய்வுநிலை உயர் நீதிமன்ற நீதியரசர்
* டி. திசாநாயக்க ஓய்வுநிலை அமைச்சின் செயலாளர்
* ஜயந்தா சீ.டீ. புளுமுல்ல ஓய்வுநிலை மாவட்ட செயலாளர் ஃஅரசாங்க அதிபர்

### 03. ஜனாதிபதி சிரேஷ்ட ஆலோசகர் நியமனம்

2024.09.24 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் துமிந்த ஹூலங்கமுவ (பொருளாதார விவகாரங்கள் மற்றும் நிதி தொடர்பான ஜனாதிபதி ஆலோசகராக) மற்றும் கலாநிதி. ஏ.ஏ.ஜே.பர்னாந்து (பொருளாதார விவகாரங்கள் மற்றும் நிதி தொடர்பான ஜனாதிபதி ஆலோசகராக நியமிக்க அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 05. பணிப்பாளர் நாயகம் நியமனம்

அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவியில் பணிபுரிந்த இலங்கை நிர்வாக சேவை தரம் 1 அதிகாரியான எச்.எஸ்.கே.ஜே.பண்டார உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகமாக முழு நேரப் பதில் கடமைக்கு நியமிப்பதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# “அதற்காக போட்டியிட வில்லை”

புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக இம்முறை நடைபெறுகின்ற பாராளுமன்றத் தேர்தலில் நான் போட்டியிடவில்லை என்பதை அனைத்து தமிழ் மக்களுக்கும் அறியத் தருகிறேன் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது முகநூலில் தெரிவித்துள்ளதாவது,

“கடந்த 2015 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் வன்னி தேர்தல் தொகுதியில் அதிகூடிய வாக்குடன் மக்களின் விருப்பத்திற்கு அமையப் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தேன்.

அன்று தொடக்கம் இன்று வரை என்னால் முடிந்த அளவு தமிழ் மக்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தொடர்ச்சியாகப் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்து வந்திருக்கிறேன்.

அத்துடன், எனது பிரதேசங்களில் தமிழ் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வுகளையும் என்னால் இயன்றவரை வழங்கியும் மக்கள் போராட்டங்களிலும் பங்குபற்றி இருக்கிறேன்.

வன்னி மாவட்டத்தில் தேவையான என்னால் முடிந்த பல அபிவிருத்தி திட்டங்களையும் நான் முன்னெடுத்து




இருக்கிறேன். தமிழ் மக்கள் எனக்கு இவ்வளவு காலமும் வழங்கிய ஆதரவிற்கும் கௌரவத்திற்கும் நான் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

புதியவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக இம்முறை நடைபெறுகின்ற பாராளுமன்ற தேர்தலில் நான் போட்டியிடவில்லை என்பதை அனைத்து தமிழ் மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

அதே நேரம், தமிழர்களின் உரிமைக்காகத் தொடர்ச்சியாக நான் உழைத்து கொண்டிருப்பேன் என்பதை உறுதியாகக் கூறுகின்றேன்.

எனக்குத் தொடர்ச்சியான ஆதரவை இவ்வளவு காலமும் நல்கிய அனைத்து உறவுகளுக்கும் நன்றிகளை தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் உங்களுடன் நான் பயணிப்பேன் என்பதையும் கூறிக் கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

# புத்தாக்கக் கண்காட்சியும் சிறுவர் சந்தையும்






சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி சிறுவர் புத்தாக்கக் கண்காட்சியும் சிறுவர் சந்தையும் ஏறாவூரில் செவ்வாய்க்கிழமை(01) இடம்பெற்றது.

குழந்தைகளின் சோலை இஸ்லாமியப் பாலர் பாடசாலை மற்றும் ஸாறா பாலர் பாடசாலை ஆகியவற்றின் நிருவாகப் பணிப்பாளரும் மட்டக்களப்பு தேசியக் கல்வி கல்லூரியின் விரிவுரையாளருமாகிய அஷ்ஷேஹ் எம்.எல்.அப்துல் வாஜித் மௌலவியின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளை ஏறாவூர் நகரப் பிரதேச செயலாளர் நிஹாறா மௌஜுத் மற்றும் ஏறாவூர் நகர சபையின் செயலாளர் எச்.எம்.எம். ஹமீம் ஆகியோர் வைபரீதியாகத் திறந்து வைத்தனர்.

அங்கு சிறார்களின் தலைமையில் புத்தாக்கக் கைவினைப் பொருள் கண்காட்சியும் பல்வகைப் பொருட்களின் மலிவு விலைச் சந்தையும் இடம்பெற்றதுடன் இதன்போது சிறார்களை ஊக்குவிக்கும் வகையில் இனிப்புப் பண்டங்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன.





# நபர் ஒருவரின் சடலம் மீட்பு

கொட்டாவை, அதிவேக நெடுஞ்சாலை நுழைவாயிலுக்கு அருகில் உள்ள வெறிச்சோடிய நிலமொன்றிலிருந்து நபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டதாக ஹோமாகம பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 50 வயது மதிக்கத்தக்கவர் எனவும் இதுவரை அவரின் அடையாளம் உறுதிப்படுத்தவில்லை எனவும் பொலிஸார்



தெரிவித்தனர்.

சுமார் ஒரு வாரமாகத் துர்நாற்றம் வீசியதால் அப்பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் சென்று சோதனையிட்டுப் பார்த்தபோது, சடலம் காணப்பட்டுள்ளது.

பின்னர், இது தொடர்பில் 119 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பொலிஸாருக்கு அறிவிக்கப் பட்டதையடுத்து, சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார், இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# வருடாந்த திருவிழா நிறைவு

எம்.எஸ்.எம்.நூர்தீன்


மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் கல்லடி தூய அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தின் வருடாந்த திருவிழா கொடியிறக்கத்துடன் ஞாயிற்றுக்கிழமை (29) அன்று நிறைவுபெற்றது.















# உரிய நிவாரணம் கிடைக்காவிடின் அரசாங்கம் பலனைப் பெறாது

தேசிய மக்கள் சக்தியின் தலைவரான அனுரகுமார திசாநாயக்க, புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர், அதிரடியான சில மாற்றங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அவர், ஜனாதிபதியாக மிக எளிமையான முறையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டமையே முதலாவது மாற்றமாகும்.

மாற்றம் அல்ல, அது (ஏ) மாற்றம் என்று குறிப்பிட்டு பல்வேறான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. சமூக ஊடகங்களில் இருப்போர், இவ்வாறான விமர்சனங்களைப் பார்த்திருப்பீர்கள், பொதுவெளியில் அவ்வாறான நிலைமையொன்று இல்லை என்பதே எமது அவதானிப்பாகும்.

அனுரகுமார திசாநாயக்க, ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஒருசில நாட்களிலேயே, பழைய பல்லவிகளைப் பலரும் பாடத் தொடங்கிவிட்டனர். ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அளிக்கப்பட்டுள்ள சில உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டன.

புதிய ஜனாதிபதி அல்லது அவருக்குக் கீழே இருக்கும் சிறிய அமைச்சரவையாக அதிரடியான, ஜனரஞ்சகமான, மக்களுக்கு உடனடியாக சென்றடையக்கூடிய தீர்மானங்களை எடுக்கமுடியும். எனினும், அவற்றை நடைமுறைப்படுத்த அரச இயந்திரம் செயற்படவேண்டும். இல்லையேல், கடந்தகால அரசாங்கங்களில் முன்னெடுக்கப்பட்டதை போலவே இதுவும் அமைந்துவிடும்.

தேசிய மக்கள் சக்தி மட்டுமன்றி, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ஏனைய வேட்பாளர்களின் விஞ்ஞாபனங்களை அமுல்படுத்த வேண்டுமாயின், அவற்றுக்கும் பல வருடங்கள் எடுக்கும், ஏனெனில், சில முன்மொழிவுகளை அமுல்படுத்த சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும். அவற்றுக்குப் பாராளுமன்றத்தில் அங்கிகாரம் பெறவேண்டும்.

மக்களுக்கு உடனடியாக நிவாரணங்கள் கிடைக்கும் வகையில், பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. முட்டை, கோழி இறைச்சி, எரிபொருட்களின் விலைகள் குறைந்துள்ளன. ஆனால், அவற்றில் இருந்து தயாரிக்கப்படுகின்றன உற்பத்தி பொருட்களின் விலைகள் குறையவில்லை.

நிலைமை அப்படி என்றால், விலை குறையும் போது, நுகர்வோருக்கு ஏன் இன்னும் பலன் கிடைக்கவில்லை என்பது கடும் பிரச்சினையாக உள்ளது. அதற்கான பொறிமுறையை உருவாக்குவது, நுகர்வோர் சட்டத்தை மீறுவோருக்கு எதிராக அதிரடியாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டியதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

நுகர்வோர் அத்தியாவசியப் பொருட்களைக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு பெருமளவு குறைந்துள்ளது.

விலைகள் கூடும்போது, பொருட்களின் விலைகளையும், சேவைகளின் கட்டணங்களையும் அதிகரித்துக்கொள்வோர், விலைகள் குறையும் போது, கையிருப்பில் இருந்தை விற்கின்றோம். சேவைகளின் கட்டணங்கள் குறைவில்லை ஆகையால், புதிய விலையை அமுல்படுத்த முடியாது என்றெல்லாம் சாக்குப்போக்கு கூறி விடுகின்றனர்.

எரிபொருட்களின் விலைகள் குறைந்துள்ளன. அதனால், சேவைகளின் கட்டணங்களும் குறையும். இதனால், சாதாரண பொது மக்களே பயனடைவர். என்னதான் விலைகளைக் குறைத்தாலும். உரிய நிவாரணம் சாதாரண மக்களுக்கு கிடைக்காவிடின், அரசாங்கம் எதிர்பார்த்திருக்கும் எந்த பலனைப் பெறாது என்பதை நினைவூட்டுகின்றோம்.


# தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







# வாழ்வியல் தரிசனம்

ஒவ்வொருவருக்கும் நோய் வருவதும் அது பின்னர் குணமடைவதும் சாதாரணமானது. சிலநேரங்களில் கடுமையான நோய்களும் தாக்கிவிடுவதுண்டு. அப்பொழுது குடும்பத்தினர் வழிபாடுகளைச் செய்வார்கள். இதனால், நோய் குணமாகியவுடன், அது இறைவன் செயலாகும் என நிம்மதிப் பெருமூச்சு விடுவதுண்டு.

எனவே, மாறி மாறி வரும் துன்பங்களைக் கண்டு, அதீதமாகக் கவலைப்படல், தேகத்தை ஆரோக்கியமற்றதாக மாற்றிவிடும்.

கடவுள் மனிதர்களைத் தொடர்ந்தும் துன்பப்படுத்துவதில்லை. இயற்கையை நம்புங்கள். அதன் மாற்றங்கள், உடல்நிலையின் ஆரோக்கியத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும். நோய்கள் வருவது சாதாரணமானது ஆகையால், அவைகளை மாற்றுவதற்கும் வழியுண்டு. மக்கள் யாவரும் இயற்கையுடன் பயணிக்கின்றார்கள். நோய்கள் வந்தால், கண்டபடி நெஞ்சத்தில் கற்பனைகளை வளர்த்தலாகாது. அச்சம், சந்தேகம், கற்பனை என்பன பிறரது வதந்திகளால்தான் பெரும்பாலும் உருவாகின்றன. இதனால் மக்கள் அதிகளவில் பாதிப்புகளுக்கு உட்படுகின்றார்கள்.

நல்லதை நினைக்க வேண்டும். கவலைகளைக் கண்டபடி விலைக்கு வாங்கலாகாது. வாழ்க்கை, வெறுப்புகளுக்குள்ளும் குழப்பங்களுக்குள்ளும் உள்ளது என எண்ணலாகாது. என்றும் சுகதேகியாக, சந்தோஷமாக அமைதி நிலையில் வாழ்வோம் என நம்பிக்கை கொள்ளவும்.

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்



எம்.எஸ்.எம்.ஐயூப்

# சமூக மாற்றத்துக்கு சிறுபான்மையினர் தயாரா?

இலங்கை வரலாற்றில் மிகவும் சிறிய அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் அமைச்சரவையில் அவர் உட்பட மூவர் மட்டுமே இருக்கின்றனர். இதற்கு முன்னர் 1960களில் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அரசாங்கத்தில் சில காலமாக 12 அமைச்சர்கள் இருந்துள்ளனர்.

சில ஜனாதிபதிகளின் காலத்தில் பெருந்தோட்ட துறைக்கு ஒரு அமைச்சரும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பிற்கு என்று ஒரு அமைச்சரும் தென்னைக்கு மற்றொரு அமைச்சரும் நியமிக்கப்பட்டு இருந்தனர். கல்வி, உயர் கல்வி மற்றும் கல்வி அபிவிருத்தி என்று மூன்று அமைச்சர்கள் ஒரு காலத்தில் இருந்தனர். கோட்டாபயவின் காலத்தில் மட்பாண்டங்களுக்கும் பத்திக் தொழிலுக்கும் என்றெல்லாம் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

இவ்வாறு சில ஜனாதிபதிகளின் காலத்தில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை நூற்றையும் தாண்டியது. தமக்கு உதவியவர்களுக்கு பொதுப் பணத்தில் சுகபோக வாழ்க்கையை அனுபவிக்கச் சந்தர்ப்பத்தை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க கடந்த 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற போது, அவரும் உள்ளிட்ட மூவர் மட்டுமே அக்கட்சியின் சார்பில் பாராளுமன்றத்தில் இருந்தனர். அவர் ஜனாதிபதியான உடன் பாராளுமன்றத்தில் அவரது இடத்துக்கு லக்ஷ்மன் நிப்புணஆரச்சி நியமிக்கப்பட்டு ஜனாதிபதியும் உள்ளிட்ட நால்வரைக் கொண்ட அமைச்சரவை நியமிக்கப்படவிருந்தது.

எனினும், நிப்புணஆரச்சி பாராளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்யாது, அவரை அமைச்சராக நியமிக்க முடியாது என்று சட்டமா அதிபர் கூறியதாகக் கூறப்படுகிறது. ஆயினும், அவர் சத்தியப்பிரமாணம் செய்யும் வகையில் பாராளுமன்றத்தைக் கூட்ட ஜனாதிபதி விரும்பவில்லை. எனவேதான் நான்கு பேர் கொண்ட அமைச்சரவைக்குப் பதிலாக மூன்று பேரைக் கொண்ட அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளது.

எனினும், இதற்கு முன்னர் பாராளுமன்றத்துக்கு நியமிக்கப்பட்ட சில எம்.பிக்கள் சத்தியப்பிரமாணம் செய்யும் முன்னரே அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளனர். பசில் ராஜபக்ஷ 2021 ஜூலை 7ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவால் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். மறுநாள் அவர் நிதி அமைச்சராகச் சத்தியப் பிரமாணம் செய்து விட்டு பாராளுமன்றத்தில் எம்.பியாக சத்தியப் பிரமாணம் செய்தார். எனினும், நிப்புணஆரச்சியின் பிரச்சினையைப் பெரிதுபடுத்தாமல் ஜனாதிபதி மூவரைக் கொண்ட அமைச்சரவையை நியமித்துள்ளார்.

கடந்த செப்டெம்பர் மாதம் 25ஆம் திகதியே இந்த அமைச்சரவை நியமிக்கப்பட்டது. அன்று இரவே ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தார். அத்தோடு, எம்.பியாக சத்தியப் பிரமாணம் செய்யாமலேயே நிப்புணஆரச்சியும் ஏனைய எம்.பிக்களைப் போல் எம்.பி. பதவியை இழந்தார். பாராளுமன்றம் கலைக்கப்பட்டதை அடுத்து புதிய பாராளுமன்றத்தைத் தெரிவு செய்வதற்காக நவம்பர் மாதம் 14ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறும் பட்சத்தில், 25 அமைச்சர்களும் ஏறத்தாழ அதே எண்ணிக்கையில் பிரதி அமைச்சர்களும் நியமிக்கப்படுவர் என்றும் இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட மாட்டார்கள் என்றும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி பதவிக்கு வருவதானது வெறுமனே ஆட்சி மாற்றம் அல்ல, அது ஒரு சமூக பொருளாதார மாற்றத்தையும் மக்களின் அரசியல், சமூக முறைமை மாறத்தை கொண்டு வரும் என்றும் அதன் தலைவர்கள் நீண்ட காலமாகக் கூறி வருகின்றனர்.

தற்போதைய சமூக அமைப்பை மட்டுமே கண்டு இருக்கும் இந்த நாட்டு மக்களில் பெரும்பாலானோர்களுக்கு இந்த முறைமை மாற்றம் என்றால் என்ன என்பது விளங்கவில்லை. அதை விளங்கப்படுத்துவதைப் போல், தமது பதவியேற்பு நடைபெறும் நிகழ்ச்சியை ஜனாதிபதி அனுரகுமார ஒரு வைபவமாகவன்றி ஒரு உத்தியோகபூர்வ நிகழ்ச்சியாகவே நடத்தினார்.

முன்னைய ஜனாதிபதிகள் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட போது, இடம்பெற்றதைப் போல், குதிரை ஊர்வலம், இராணுவ மரியாதை போன்ற எதுவும் அந்நிகழ்ச்சியில் இடம்பெறவில்லை. ஆரம்பத்திலேயே முறைமை மாற்றத்தைச் செய்து காட்டுவது அவரது நோக்கமாக இருந்திருக்கலாம். பொதுத் தேர்தலுக்குப் பின்னர், தாம் நியமிக்கும் அமைச்சர்களுக்கு விஞ்ஞானபூர்வமாக கடமைகள் பகிர்ந்தளிக்கப்படும் என்று அவர் கூறியுள்ளார். அதாவது ஒன்றோடொன்று சம்பந்தப்பட்ட பொறுப்புக்கள் ஒவ்வொரு அமைச்சருக்கும் வழங்கப்படும் என்பதாகும்.

தற்போது வாழ்வில் சகல விடயங்களும் அரசியல் மயமாக்கப்பட்டுள்ளன.

அரசியல்வாதிகள் கொள்கை வகுக்கும் பணியிலும் நிர்வாக விடயங்களை மேற்பார்வை செய்யும் பணியிலும் தான் ஈடுபட வேண்டும். தொழில் வழங்குவதோ, பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்ப்பதோ அவர்களது தொழில் அல்ல. இதனால் தான் தேர்தலில் தமக்கு நட்டமேற்படும் அபாயம் இருந்தும் தமது பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்வது தமது ஆட்சியில் தொழில் பெறவோ, பதவி உயர்வு பெறவோ, தகைமை ஆகாது என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் ஜனாதிபதித் தேர்தல் மேடைகளில் கூறி வந்தனர்.

முறைமை மாற்றம் என்னும் போது, அதில் அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் பொது மக்களுக்கும் வெவ்வேறான பொறுப்புகள் இருக்கின்றன. அரசியல்வாதிகள் அரச வருமானம் பெருகும் வகையில் நாளைய மாற்றங்களை எதிர்நோக்கும் வகையிலும் ஊழல்களுக்கு இடமளிக்காத வகையிலும் தொழில்கள் மூலம் பொதுமக்களின் வருமானம் அதிகரிக்கும் வகையிலும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யக் கொள்கைகளையும் எண்ணக்கருக்களையும் வகுத்து அதிகாரிகளிடம் கொடுக்க வேண்டும்.

அதிகாரிகள், நிபுணர்கள் மூலம் அந்த நோக்கங்கள் நிறைவேறும் வகையில், திட்டங்களைத் தீட்டி அரச இயந்திரத்தை வடிவமைத்து அத்திட்டங்களை அமுலாக்க வேண்டும். இத்திட்டங்களில் அரச இயந்திரத்திலும் இணையும் மக்கள் தமது பொறுப்புக்களை முறையாக நிறைவேற்ற வேண்டும். இவ்வனைத்தும் முறையாகச் செயற்படும் வகையில், அரசியல்வாதிகள் சட்டங்களையும் வகுக்க வேண்டும். அப்போது எவரும் அரசியல்வாதிகளின் பின்னால் போகத் தேவையில்லை.

சொல்லில் வர்ணிக்கும் போது, இது அழகாக இருந்த போதிலும், அது மிகவும் நீண்ட கால கடினமானதோர் நோக்கமாகும். ஆயினும், பத்து ஆண்டுகளிலாவது இந்த நோக்கங்களில் 80 சதவீதமாவது நிறைவேறும் என்ற நம்பிக்கை ஏற்படுமானால் தற்போதைய பெற்றோர் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றி அச்சம் கொள்ளத் தேவையில்லை.

தற்போதைய முறைமையில் ஒரு சிலர் மட்டுமே நன்மை அடைகின்றனர். ஊழலோடு சம்பந்தப்படாத எதுவுமே இல்லை என்ற நிலையே நாட்டில் இருக்கிறது. சிலர் அரச அதிகாரத்தைப் பாவித்து கோடிக் கணக்கில் பணம் சம்பாதிக்கின்றனர். சிலர் அரச இயந்திரத்தில் தமக்கு இருக்கும் அதிகாரங்களைப் பாவித்து கோடிக் கணக்கில் சம்பாதிக்கின்றனர். அவ்விரு சாராரும் தமது அதிகாரத்தைப் பாவித்து பொதுப் பணத்தில் பாரிய அளவில் வசதிகளையும் வாய்ப்புக்களையும் சிறப்புரிமைகளையும் பெறும் வகையில், சட்டங்களையும் விதிமுறைகளையும் எடுத்துக் கொண்டு இருக்கின்றனர்.

எனவே, அவர்கள் முறைமை மாற்றத்தை விரும்பவில்லை. இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் அவர்களது நோக்கம் நிறைவேறாவிட்டாலும் அவர்கள் விட்டுக் கொடுக்கப் போவதில்லை.

இதற்கிடையே சாதாரண மக்களில் பலரும் வேறு வழியின்றி ஒருவரை ஒருவர் ஏமாற்றிப் பிழைக்கின்றனர். பொது மக்களில் பலருக்கு முறைமை மாற்றம் என்றால் என்னவென்று தெரியாது. மேலும் சிலருக்குத் தெரிந்திருந்தாலும் சுவர்க்கத்தைக் கொண்டு வந்து காலடியில் வைப்போம் என்று பல தசாப்தங்களாக அரசியல்வாதிகள் அளித்த வாக்குறுதிகளால் ஏமாந்து எவரையும் நம்பாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மேலும், சிலருக்கு இதுவரை தாம் தலைவர்களாகக் கருதியவர்களைப் பதவியில் அமர்த்தி அழகு பார்க்க வேண்டும் என்ற ஆசை. சிலர் சரி, இவர்களுக்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவோம் என்ற ஊசலாடும் நம்பிக்கையோடு முறைமை மாற்றத்துக்கான முயற்சியை ஆதரிக்கின்றனர். மிகச் சிலரே நம்பிக்கையோடு நாம் மாறாவிட்டால் முறைமையும் மாறாது என்று அம்மாற்றத்துக்காக முன்வருகிறார்கள். இலங்கையில் சிறுபான்மை மக்களைப் பார்க்கிலும், பெரும்பான்மை மக்கள் சமூக மாற்றத்துக்காக முன்வந்துள்ளமை இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் காண முடிந்தது.

தற்போதைய நிலையில், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கத்தின் தலைவர்கள் முறைமை மாற்றத்திற்கான தமது முயற்சியை கை விட்டுக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பாவித்து தாமும் தற்போதைய முறைமையில் மூழ்கி சுகபோக வாழ்க்கையை அனுபவிக்க முற்படுவார்கள் என்று கருதக் காரணங்கள் இல்லை.

ஆனால், அவர்களுக்கு அதற்காகப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருக்க வேண்டும். இன்றேல் அவர்களால் சமூக மாற்றத்துக்கான எந்தவொரு சட்டத்தையோ, பிரேரணையையோ நிறைவேற்ற முடியாது. அப்பெரும்பான்மை மற்றொரு கட்சிக்குக் கிடைத்தால் எதிர்வரும் ஐந்தாண்டுகளும் ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையிலான மோதல்களை மட்டுமே பார்க்க முடியும்.

# கடிதங்கள்

## நீர் பிரச்சினை தீர்க்க நடவடிக்கை எடுக்கவும்




வலப்பனை பிரதேச சபைக்கு உட்பட்ட இராகலை பிரதேசத்தில் வசிக்கும் சுமார் 5,000 மேற்பட்ட மக்களுக்கு ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டால் தமது அன்றாட தேவைகளைக்கூட மேற்கொள்ள முடியாமல் திண்டாடி வருவதாகக் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த கால அரசாங்கத்தினால் இராகலை மேல் பிரிவின் மலை உச்சியில் பாரிய குடிநீர் தாங்கி ஒன்று அமைக்கப்பட்டு, அதன் ஊடாக இராகலை பிரதேச மக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், கடந்த ஒருமாத காலமாகக் குடிநீர் வழங்கும் நடவடிக்கையில் மாற்றம் ஏற்பட்டு 4 நாட்களுக்கு ஒருமுறை மாத்திரம் தண்ணீர் விநியோகம் செய்யப்படுவதாகப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, இது தொடர்பாக நுவரெலியா மாவட்ட மற்றும் வலப்பனை பிரதேச செயலாளர்கள் கவனத்திற்குக் கொண்டு நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- ஆ.ரமேஸ்



# பழைமைவாதியும் பழந்தமிழும்



தருமலிங்கம் லுகிர்தா,
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



யாதும்ஊரே யாவரும் கேளிர் தீதும் நன்றும் பிறர் தர வாரா” என்று பாடிய கணியன் பூங்குன்றனார் உலகத்துக்கே சமத்துவத்தை விதைக்கிறார்.

பண்பாடு எனப்படுவதாவது பயிர் விளைகின்ற நிலத்தை உழுது பண்படுத்துவது போல, மக்கள் தம் வாழ்க்கையினை நெறிப்படுத்துவதே பண்பாடாகும் தமிழர் பண்பாடும் அத்தகையதே. அதாவது ‘அறம், பொருள், இன்பம், வீடு’ என்கின்ற விடயங்களைப் பின்பற்றி வாழ்வதே வாழ்க்கை பண்பாடாகும்.

அறத்தின் வழி வாழுதல் தமிழர் பண்பாடாகும் இதனை வள்ளுவர் “அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்இழுக்கா இயன்றது அறம்” என்று தமிழ்ப் பண்பாடு அறம் சார்ந்தது என்று உலகுக்கே எடுத்துக் காட்டுகிறார்.

தமிழ்ப் பண்பாட்டில் அறிவியல் பின்னிப் பிணைந்துள்ளது. பிறப்புமுதல் இறப்பு வரை சடங்குகள், சம்பிரதாயங்கள் மற்றும் உணவு, ஆடை, அணிகலன்கள், பழக்கவழக்கங்கள் என்பவை தமிழர் வாழ்வியலோடு இணைந்தவை. அவை அனைத்தும் பல்வேறு அறிவியல் அம்சங்களைப் பிரதிபலித்து நிற்கின்றன.

தமிழ்ப் பண்பாடு தொன்மையானது அதேநேரம் அனைவராலும் விரும்பி ஏற்கப்படுகின்றது. அன்று ஆங்கிலேயர் எங்கள் பண்பாடு கலாச்சாரத்தைச் சிதைக்கக் கோயில்களை அழித்தனர். மத மாற்றத்ததைத் திணித்தனர். அழிந்ததா? இன்று பல ஆங்கிலேயப் பெண்கள் புடவை கட்டி, காலில் கொலுசு மாட்டித் தமிழ்ப் பெண்கள் போல் உலாவர, ஆண்கள் வேட்டியும் அணிந்து வருகின்றனர்.

கனடா, அமெரிக்கா, சுவிஸ் போன்ற நாடுகளில் இன்றும் தமிழர் பண்பாட்டில் பெண்கள் சேலை கட்டி மஞ்சள் பூசி. மூக்கில் மூக்குத்தி, காலில் கொலுசு, விரலில் மோதிரம், காலில் மெட்டி என்றவாறாக பல அணிகலன்களை அணிகின்றனர். இவை வெறும் அழகிற்காக என்று நினைக்கின்றனர். அதில் அறிவியல் சார்ந்த பல உண்மைகள் செறிந்துள்ளன.

ஒரு பெண் பொட்டு வைப்பது மன ஒருமைப் பாட்டுடன் புலன் சிதறாமல் இருப்பதற்காகவே. நெற்றியில் புருவ நடுவில் பைனீயல் கிளாண்ட் என்னும் அகச்சுரப்பி உள்ளது. இதனை யோகிகள் மூன்றாவது கண் என்னும் நெற்றிக்கண்ணாகக் குறிப்பிடுகின்றனர். அதைத் தூண்டி விழிப்படையச் செய்யவே நெற்றியில் பொட்டு, திருநீறு இட்டுக் கொள்கிறோம். திருநீறு அணிந்தால் உடலும், உள்ளமும் தூய்மை பெறும். சந்தனம் உடலுக்குக் குளிர்ச்சியையும், குங்குமம், மஞ்சள் இரத்த தூய்மையையும் தரும். நெற்றியில் இடும் திலகத்தால் திருஷ்டி தோஷமும் நீங்கும்.

பெண்கள் மூக்குத்தி அணிவதானது - மூக்குப் பகுதியில் ஒரு துவாரத்தை ஏற்படுத்தி அந்த துவாரத்தில் தங்க மூக்குத்தி அணிந்தால் அந்தத் தங்கம் உடலில் உள்ள வெப்பத்தைக் கிரகித்து தன்னுள் ஈர்த்து வைக்கும் சக்தியைப் பெறும். அது மட்டுமல்ல, மூக்கின் மடல்ப் பகுதியில் ஒரு துவாரம் ஏற்பட்டால் அதன் மூலம் நரம்பு மண்டலத்திலுள்ள கெட்ட வாயு அகலும். அத்துடன், பெண்களுக்கு ஏற்படுத்தக் கூடிய சளி. ஒற்றைத் தலைவலி, மூக்குச் சம்பந்தமான தொந்தரவுகள் பார்வைக் கோளாறு சரி செய்யப்படுகின்றன. இன்றைக்கு நாகரிகம் வளர்ந்து விட்டதால் சில பெண்கள் வலது பக்கம் மூக்குத்தி அணிகின்றார்கள்.

பெண்கள் திருமணத்தின் கட்டாயம் மெட்டி அணிவது தமிழ் மரபு. இதில் அடங்கியுள்ள அறிவியல் கருத்தானது பெண்களுக்குக் கருப்பை பாதிப்பு ஏற்படாது என்பதாகும். பெண்களின் கருப்பை நரம்புகளுக்கும் கால் விரல் நரம்புகளுக்கும் ஒரு வித தொடர்பு உண்டு. மெட்டி அணிவதால் கருப்பையின் நீர்ச்சமநிலை எப்போதும் பாதிப்படைவதில்லை. வெள்ளியில் இருக்கம் கூடிய ஒருவித காந்த சக்தி காலில் இருக்கும் நரம்புகளிலிருந்து உடலில் ஊடுருவி நோய்களை நிவாரணம் செய்யும் ஆற்றல் கொண்டது. மெட்டி அணிவதால் பெண்கள் கர்ப்பம் அடையும் போது மயக்கம், வாந்தி, பசியின்மை என்பன அற்றுப் போகும். நரம்பினை அழுத்துவதால் வலி குறையும்.

அணிகலன்கள் அணிவதானது உடலியல் அடிப்படையிலான நரம்புகளின் சீரான இயக்க முறைக்கும் அணிகலன்களுக்குமிடையே நெருங்கிய தொடர்புகளிலிருந்து கொண்டிருப்பதனை வைத்திய மரபுகள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. உண்மையும் கூட மனிதனானவன் இயந்திரம் போன்றவன். அவன் இயக்கத்திற்கு ஏதாவதொரு மூலம் அடிப்படையாக இருக்கிறது அதாவது கழுத்திலுள்ள இருபக்க நரம்புகள், மணிக்கட்டிலுள்ள உயிர்நாடி நரம்புகள் கணுக்காலிலுள்ள நரம்புகள். இடுப்பிலுள்ள நரம்புத் தொகுதி, மூக்கினதும் காதினதும் மண்டலம் என்பன மிக இலகுவாக பல்வேறுபட்ட உலோகங்களினால் உருவாக்கப்படு அணிகலன்களின் ஈர்ப்புச் சக்திக்கும் அதனூடான கதிரியக்கத் தொழிற்பாட்டிற்கும் உட்படுகின்ற இதனால்தான் தமிழர் பண்பாட்டில் அணிகலன்களிற்கும் அவ்வளவு முக்கியத்துவ வழங்கப்படுகின்றது.


தமிழர் பண்பாட்டில் சிவ சின்னங்களான விபூதி, சந்தனம், குங்குமம் இடுவது வெப்பத்தைத் தணித்து புத்துணர்வு பெறுவதற்காக, இது நெற்றியின் இரு புருவங்களுக்கும் இடையிலுள்ள நெற்றிப் பொட்டிலே பட்டும் படாமலும் சுண்டுவிரலை நேராகப்பிடித்தால் மனதில் ஒருவகை உணர்வு தோன்றும். அந்த உணர்வை அப்படியே வைத்துத் தியானம் செய்தால் மன ஒருமைப்பாடு தோன்றும், சிந்தனை தெளிவுபெறும், எதையும் தெளிவாகப் புரிந்து கொள்ளும் நிலை தோன்றும். சந்தனம், திருநீறு, குங்குமம் இவைகளுக்கு குளிர்ச்சியூட்டும் தன்மை உண்டு. எனவே அந்த நரம்பு மண்டலம் குளிர்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காகச் சந்தனம் பூசி, சந்தனம் காயாமல் இருக்கக் குங்குமம் இடுகிறோம். இவற்றைத் தரித்தால் புத்துணர்வும், புதுத் தெளிவும், புதிய சிந்தனைகளும், உற்சாகமும் தோன்றும். இதன் மூலம் உணர்ச்சியற்ற நரம்புகள் தூண்டப்படுகின்றன.

உருத்திராக்கம் அணிவது சின்னச்சின்ன நோயிலிருந்து தப்புவதற்கும் அது மார்பில் சளி நிவாரணியாகவும் விறைப்பு, நடுக்கம், பயம் குறைவதுடன் சீரான சுவாசம், சிந்தனை வளர்ச்சி, ஞாபக சக்தி என்பன ஏற்படுகின்றது. தமிழர்கள் காலங்காலமாக பருத்தியினாலான ஆடைகளினையே அணிந்து வந்தனர். ஏனெனில் வெப்பம் அதிகமாக உள்ளதால் தம்மை அதன் உஷ்ணத்திலிருந்து காப்பதற்கும், சுவாத்தியத்திற்குமே ஆகும்.

“மண்ணுயிரையும் தன்னுயிர் போல் நேசி” என்ற தமிழனின் வாழ்வியலில் விருந்தோம்பல் என்பது ஒவ்வொரு தமிழ் மக்களின் தலையாய கடமை. அன்பு நெறியினை வலியுறுத்துகின்றது. அதிகாலையில் துயில் எழுந்து இறைவனை வணங்கி யோகாசனம் செய்து உள்ளத்தையும் மனத்தையும் ஒருநிலைப்படுத்தும் வழிமுறைகள் வலியுறுத்தப்படுகின்றன. உணவின் முக்கியத்துவமும் தமிழ்ப் பண்பாட்டின் கூறு, எனவேதான் சித்தர்களும் ஞானிகளும் பல வாழ்வியற் தத்துவங்களை விட்டுச்சென்றுள்ளனர். பல்வகை மூலிகை செடியினை கொண்ட எம் நாட்டு மருத்துவம் மகத்தானது. பக்க விளைவு எதுவும் அற்றது. அத்துடன், உணவோடு உணவாக எடுக்கப்படுகின்றது.

(வியாழக்கிழமை தொடரும்...)





# நெருக்கடிக்கு மத்தியில் பிரபல்யமடையும் நீர்வீழ்ச்சி



ஞா.மைக்கல் பெவன்,
3ஆம் வருடம்,
ஊடககற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

,நுவரெலியா மாவட்டம் என்ற உடன் அடுத்த கனம் நினைவுக்கு வருவது இங்கு காணப்படுகின்ற சுற்றுலாத்தலங்களின் அழகும் அதன் வசீகரமும் ஆகும். இலங்கை நாட்டின் சுற்றுலாத்துறையில் அதிகளவான இலாபத்தைப் பெற்றுத்தருகின்ற இடமாகவும் வெளிநாட்டவர்கள் அதிகம் விரும்பும் காலநிலையைக் கொண்ட பிரதேசமாகவும் இது காணப்படுகின்றது. இங்கு தற்போது புதிதாக அதிகமான மக்களின் அபிப்பிராயத்தைப் பெற்ற இடங்கள் சுற்றுலாத்தளங்களாக மாற்றம் அடைந்து வருகின்றது. அவ்வாறு மஸ்கெலியா நகரத்தை அண்மித்து காணப்படும் தனியாருக்குச் சொந்தமான தேயிலைத்தோட்டமான ரோஸ்பீல்ட் என்ற இடத்தில் காணப்படும் நீர் வீழ்ச்சியும் ‘கார்ட்மோர் நீர்வீழ்ச்சி’ (gartemore waterfalls) என்ற பெயரில் அண்மைக்காலத்தில் பிரபல்யம் பெற்று வருகின்றது.

குறித்த இந்த நீர்வீழ்ச்சியானது நேரடியாக மவுஸாக்கல நீர்த் தேக்கத்தில் விழுவதன் காரணமாக ஏனைய நீர்வீழ்ச்சிகளை விடத் தனிச் சிறப்பைக் கொண்டதாக அமைகின்றது. இதன் காரணமாக மக்கள் இந்த இடத்திற்கு வருகை தந்த வண்ணம் உள்ளனர். விடுமுறை தினங்களில் சுற்றுலாப்பயணிகளின் வருகையானது வழமைக்கு மாறாக அதிகமாக உள்ளது.

அத்துடன், சிவனொளிப்பாத மலையை அண்மித்து இந்த நீர் வீழ்ச்சியானது அமையப்பெற்றுள்ளதன் காரணமாக இலகுவாக மக்கள் மத்தியில் பிரபல்யமடைகின்றது. அத்துடன், சுற்றுலாப் பிரயாணிகள் மூலம் சமூகவலைத்தளங்களில் பதிவிடப்படுகின்ற ட்ரோன், காணொளிகள் மக்கள் மத்தியில் அதிகமான வரவேற்பைப் பெறுகின்றது.

மேலும், இந்த சுற்றுலாப் பயணிகளை மையமாகக் கொண்டு வீதியோர கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் என்பன சில உருவாக்கப்பட்டு பிரதேசவாசிகள் இதன் மூலம் இலாபத்தையும் பெற்றுக்கொள்கின்றனர். மேலும், மஸ்கெலியா நகரத்தை ஊடறுத்து சுற்றுலாப்பயணிகள் செல்வதன் காரணமாகச் சில்லறைக்கடை வியாபாரிகளும் பயன்பெறுவதோடு நகரத்தில் காணப்படும் சுற்றுலா விடுதிகளின் உரிமையாளர்களும் பயனடைகின்றனர்.

ஆனால், சுற்றுலாப் பிரயாணிகள் பயணிக்கின்ற பாதையானது மிக மோசமான நிலையில் காணப்படுகின்றது. மஸ்கெலியா நகரத்திலிருந்து கார்ட்மோர் வரையிலான பிரதான பாதையானது மிக நீண்ட காலமாகப் பயணிப்பதற்குக் கடினமான வகையில் சிதைவடைந்து காணப்படுகின்றது. இதனால் நீர் வீழ்ச்சியைப் பார்வையிட வருகின்ற சுற்றுலாப் பிரயாணிகள் சிரமத்தை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

இவ்வாறான வகையில் பாரிய இலாபத்தை ஈட்டும் குறித்த இந்த சுற்றுலாத்தளமானது முறையாகப் பராமரிக்காத நிலையை அவதானிக்க முடிகின்றது. அத்தோடு நீர்வீழ்ச்சியின் ஆரம்பப் புள்ளியிலிருந்து பார்வை இடும் பார்வையாளர்களுக்கு உரிய பாதுகாப்பு வேலிகள் மற்றும் தடுப்புக்கள் என்பன அமைத்துக்கொடுக்கவில்லை.

அத்துடன், சுற்றுலாப் பிரயாணிகள் மூலம் வீசப்படுகின்ற பொலித்தீன் போன்ற கழிவுகள் முறையாக அகற்றப்படாமையின் காரணமாகச் சூழல் மாசடைகின்றது. இதன் காரணமாக இதன் இயற்கை அழகு கெடுவதற்கும் வாய்ப்புகள் உள்ளது.

மேலும், தனது சொகுசு வாகனங்களில் வருகின்ற மக்கள் காட்மோர் பேருந்து தரிப்பிடத்தில் இருந்து நீர்வீழ்ச்சி அமைந்திருக்கும் இடத்திற்குச் செல்ல முடியாத அளவு மிக மோசமான அளவு பாதை சிதைவடைந்து காணப்படுகின்றது. இதனால் அவர்கள் முச்சக்கரவண்டியில் பயணிக்க வேண்டிய கட்டாய நிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் அந்த பாதையில் பயணிக்கும் போது தமது வாகனத்திற்கு ஏற்படும் பாதிப்பைக் கருத்தில் கொண்டு அதிகளவான கட்டணத்தை அறவிடுகின்றனர். இதன் காரணமாக சுற்றுலாப் பிரயாணிகள் சுமார் நான்கு கிலோ மீற்றர் தூரத்திற்கு 1,500 - 2,000 ரூபாய் வரை செலுத்த வேண்டிய அசௌகரியமான நிலை காணப்படுகின்றது.

அத்துடன், நீர்வீழ்ச்சியின் அடிப்பகுதிக்குச் செல்கின்ற சுற்றுலாப் பிரயாணிகள் எடம்ஸ்பீக் தோட்டத்தின் வழியாகவே செல்கின்றனர். இதுவரையிலும் இவ்வாறான வெவ்வேறான கலாசாரத்தை சேர்ந்த மக்களைச் சந்திக்காத பிரதேச வாசிகளுக்குப் புதுமையான ஒன்றாகவும் தமது இயல்பு வாழ்க்கையைப் பாதிப்பதாக அமைவதோடு, அதிகமான காதல் ஜோடிகள் மோட்டார் சைக்கிள்களில் காலை மற்றும் மாலை நேரங்களில் இங்கு கிராமத்தில் வந்து செல்வது அங்குள்ள பாடசாலை பிள்ளைகள் மத்தியில் இவ்வாறான வாழ்க்கை முறையை அறிமுகம் செய்கின்ற போக்கும் காணப்படுவதாகக் கவலைத் தெரிவிக்கின்றனர். இவ்வாறு கிராமத்திற்கு உள்ளே நுழையாது நீர் வீழ்ச்சியின் அடிப்பகுதியைச் சென்றடைவதற்கான மாற்று வழி காணப்படுவதாகவும் அவை புனரமைக்கப்பட வேண்டும் எனவும் கருத்து தெரிவிக்கின்றனர்.

காலப்போக்கில் இந்த நீர்வீழ்ச்சியானது தற்போது இருப்பதை விட அதிகம் பிரபல்யம் அடைவதற்கான சாத்திய கூறுகள் காணப்படுகின்றதன் காரணமாக சுற்றுலாப் பிரயாணிகள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளுக்கும் தமது கோரிக்கைகளுக்கும் உரிய தீர்வை பெற்றுத்தருமாறும் பிரதேச மக்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர்.









# சர்வதேச சிறுவர் தினம் கொண்டாட்டங்கள்

சர்வதேச சிறுவர் தினமான ஒக்டோபர் முதலாம் திகதி நாடளாவிய ரீதியில் பல நிகழ்வுகள், சிறுவர்களை மகிழ்விக்கும் வகையில் பல்வேறான அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்டன.

விகாரமஹாதேவி பூங்காவிலும் சிறுவர்களுக்காக பல நிகழ்வுகள் மற்றும் கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டன.

சர்வதேச சிறுவர் தினம், ஐக்கிய நாடுகள் சபையின் யுனிசெப் அமைப்பினால் 1954ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(தமிழ்மிரர் நிருபர்கள்)

















# “என் மகனை 12 வயதில் துறவியாக்கச் சொன்னபோது”

## ஜனாதிபதி அநுரவின் தாயார் பகிர்ந்த நினைவுகள்

“எனது மகன் அனுரகுமார திசாநாயக்கவை 12 வயதிலேயே புத்த துறவியாக்குவதற்காக துறவறத்துக்கு அனுப்புமாறு சொல்லியதை நான் ஏன் ஏற்கவில்லை” என இலங்கையின் புதிய ஜனாதிபதியின் தாயார் சீலாவதி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடமத்திய மாகாணத்தின் தலைநகரான அனுராதபுரத்தில் இருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள விவசாய கிராமமான தம்புத்தேகம எனும் பகுதியில் ஒரு சிறிய ஆஸ்பெட்டாஸ் கூரையினாலான வீட்டில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் தாயார் டி.எம்.சீலாவதி (86) தனது மகள் ஸ்ரீயலதாவுடன் (62) வசித்து வருகிறார்.



இலங்கையின் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இளம் பருவம் பற்றி தாயார் சீலாவதி அளித்த பேட்டி ஒன்றில் கூறியது, “எனது மகனுக்கு சிறுவயதில் காற்றில் பட்டங்களை பறக்க விட மிகவும் பிடிக்கும். தினமும் அருகிலுள்ள நீச்சல் குளத்திற்கு சென்று நீச்சலடிக்கவும் பிடிக்கும். அனுரவுக்கு எப்போதும் புத்தகங்களை வாசிப்பது மிகவும் பிடிக்கும்.

வீட்டின் எதிரே இருந்த மரத்தின் கிளையில் அமர்ந்து சப்தமாக படித்து கொண்டிருப்பது இன்னும் நினைவில் எனக்கு இருக்கிறது. சாப்பிடும் போதும் புத்தகமோ செய்தித்தாளோ வாசித்துக் கொண்டே சாப்பிடுவது அனுரவின் வழக்கமாக இருந்தது. கல்லூரியில் படிக்கும்போது, அனுரவுக்கு அரசியலில் ஆர்வம் ஏற்பட்டது. அப்போது அவருக்கு கொலை மிரட்டலும் வந்தது. அவர் நெருங்கிய தொடர்பிலிருந்த அவரது சிறிய தந்தையார் (தந்தையின் சகோதரர்) கொலை செய்யப்பட்டார். அனுர தலைமறைவாக இருந்த காலத்தில் 1992ஆம் ஆண்டு அவரது அப்பா இறந்துபோது, அவரது இறுதிச் சடங்கில் கூட கலந்துகொள்ள முடியவில்லை.

12 வயதிருக்கும்போது, புத்த விகாரை ஒன்றின் தலைமை குரு ஒருவர், அனுரவை துறவறத்துக்கு அனுப்புமாறு கேட்டார். அதனை நான் மறுத்து விட்டேன். அனுர பிறந்து ஆறாம் மாதத்தில் அவரது ஜாதகத்தை ஒரு ஜோதிடரிடம் காட்டியபோது, “உங்கள் மகன் ஒரு நாள் அரசாள்வான்” என்று அதிர்ச்சியோடு சொன்னார். எனது மகன் சாதாரண குடும்பத்திலிருந்து இன்று அதிபராகியுள்ளார். அவர் பொய் சொல்பவரோ, மோசடி செய்பவரோ கிடையாது. அனுராதபுரத்தில் உள்ள ஆலயங்களில் எனது மகனுக்காக பிரார்த்திக்க வேண்டும்” என தெரிவித்தார்.

சகோதரி ஸ்ரீயலதா கூறும்போது, “எனது தாயார் தினமும் இரவு தொலைக்காட்சியில் செய்திகளை பார்க்கிறார். செய்தியில் எனது சகோதரன் வரும்போதெல்லாம் என் மகனா என கேட்பார். மகனுடன் இருக்க அவர் விரும்புவார். என் சகோதரன் அனுரவும் இந்தப் பகுதிக்கு வரும்பொதெல்லாம் எங்களை பார்க்க வீட்டுக்கு வருவார். அவர் இந்த நாட்டின் இந்த பகுதிக்கு வரும்போதெல்லாம், எங்களை சந்திக்கிறார். தேர்தல் பிரசாரத்தின்போது, அனுர காரில் தூங்கியதுதான் அதிகம். அவரது பதவியேற்பு ஆரவாரமின்றி நடைபெற்றது. அவர் ஆடம்பரத்தை விரும்ப மாட்டார்” என தெரிவித்துள்ளார்.

### யார் இந்த திசாநாயக்க?

இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ள அனுராதபுரம் மாவட்டம் தம்புத்தேகம எனும் பகுதியில் 24.11.1968இல் அனுரகுமார திசாநாயக்க பிறந்தார். தனது பள்ளி படிப்பினை தம்புத்தேகவில் உள்ள கமினி மகா வித்யாலயா பள்ளியிலும், தம்புத்தேகம மத்திய கல்லூரி மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தில் பயின்றார். 1988இல் இடதுசாரிக் கட்சியான தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி.) யில் இணைந்தார். 199இல் அதன் மாணவர் அமைப்பின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

2000இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் மூலம் முதன்முறையாக பாராளுமன்ற உறுப்பினராக ஆனார். 2004இல் அப்போதைய கூட்டணி ஆட்சியில் விவசாய அமைச்சராக அனுரகுமார திசாநாயக்க பதவி வகித்தார். 2014ஆம் ஆண்டு ஜே.வி.பியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். 2019இல் நடைபெற்ற 8ஆவது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட அனுரகுமார திசாநாயக்க 418,553 வாக்குகள் பெற்று 3ஆம் இடத்தை பிடித்தார். தொடர்ந்து இலங்கையில் ஊழலுக்கு எதிராக அனுரகுமார திசாநாயக்க குரல் கொடுத்து வந்தார். மேலும், இலங்கையில் 2022இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின்போது, நடைபெற்ற போராட்டங்களில் முன்னின்று நடத்தியதில் அனுரகுமார திசாநாயக்க முன்னணி வகித்ததும் குறிப்பிடத்தக்கது.

2024இல் நடைபெற்ற 9ஆவது ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட அநுர குமார திசாநாயக்க 57,40,179 வாக்குகள் பெற்று ஜனாதிபதியானார்.

(நன்றி: தி இந்து)



# நெடுந்தீவு களப்பயணம்



எஸ்.கிறிஸ்டினா,
மூன்றாம் வருட மாணவி,
ஊடககற்கை துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



நானும் எனது தோழியும் எனது சகோதரனும் நெடுந்தீவு பகுதிக்கு ஒரு களப்பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தோம். காலை 7 மணி பேருந்தில் ஏறி, 8.30 மணி அளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு நெடுந்தீவை நோக்கி சென்றபோது, குறிக்கட்டுவானைத் தாண்டி இரண்டு பக்கமும் கடலின் நடுவே ஒரு பாலம் அதன் வழியே பேருந்து சென்று கொண்டிருந்தது.

அந்த இரண்டு பக்க கடல் அழகை ரசித்தவாறு இளங்காற்று பட்டுத் தெறிக்கப் பேருந்து சென்று கொண்டிருந்தது. ஜன்னல் பக்கம் இருக்கை மிகவும் மகிழ்ச்சியான பயணம் பின்னர் துறைமுகத்தை வந்தடைந்தோம். கடல் வழியாக உள்ளே செல்ல சற்று நேரம் வடதாரகை கப்பலுக்காகக் காத்திருக்க வேண்டி இருந்தது.

காலை உணவை அந்த இடத்தில் முடித்துவிட்டு வடதாரகை கப்பல் வரவில்லை. எனவே, பொருட்களை ஏற்றிச் செல்லும் சிறிய கப்பல் ஒன்றில் ஏறினோம். அது மெல்ல மெல்லச் செல்ல கடல் நீர் எம்மில் பட்டுத் தெறிக்கப் பறவைகள் எமக்குக் கிட்ட வந்து பறந்து பறந்து செல்ல அதன் அழகை ரசித்துக் கொண்டே சென்றோம்.

இரண்டு மணி நேரம் கழித்து நெடுந்தீவில் கப்பல் போய் நின்றது. இறங்கி ஒரு முச்சக்கர வண்டி ஒன்றைப் பிடித்து தூரத்து உறவினர் வீட்டைச் சென்றடைந்தோம். அது ஒரு அழகிய வீடு மாத்திரமன்றி, கடலுக்கு அருகில் அமைந்திருந்ததால் இனம் புரியா ஓர் ஆனந்தம் எமக்கு அவர்களின் உபசரிப்பும் மெய்சிலிர்க்க வைத்தது.

கடலை நோக்கிச் சென்று இளங்காற்றை நுகர்ந்து கொண்டு கடலுக்குள் இருக்கும் சங்கு சிற்பிகளைக் கையில் எடுத்து ரசித்தவாறு இருக்கத் திரும்பிப் பார்க்கையில் பெண்கள் ஆண்கள் என கரைவலையில் சூடை மீன்களைத் தெரிந்து அதை ஒரு கூடையில் போட்டுக் கொண்டிருந்தனர். பார்க்க மிகவும் அழகாக அந்த காட்சி இருந்தது. சுற்றிவர தென்னை மரங்கள் புதுப்புது பறவைகளின் சத்தங்கள் ஒரு வெள்ளை கொக்கு படகில் ஏறி எம்மை பார்த்த வண்ணம் இருந்தது.

கடலின் நடுவே இருக்கும் பாசிகள் படகில் ஏறி வேலை செய்யும் மீனவர்கள் படகைச் செலுத்திக் கொண்டு வரும் மீனவர்கள் என எல்லா காட்சிகளும் கண்களைக் கவர்ந்த வண்ணம் இருந்தன. பின்னர் மதிய உணவைச் சாப்பிட்டு விட்டு ஓய்வெடுத்த பின்னர் எல்லோரும் உரையாடிய பின் அந்த கடற்கரை ஓரமாக நடந்து சென்று அங்குள்ள மக்களின் வாழ்க்கை முறைகளைப் பார்த்த வண்ணமும் படகில் ஏறி சற்று தூரம் சென்று துள்ளிக்குதிக்கும் மீன்களை ரசித்து விட்டு மறுபடி அந்த உறவினர் வீட்டுக்கு வந்தோம்.

இரவும் கழிந்தது. மறுநாள் காலை அந்த வீட்டிலிருந்த அம்மம்மாவின் சமையலில் பிட்டும் சூடை கருவாடும் முட்டையும் மிகவும் சுவையாக இருந்தது. அதைச் சாப்பிட்டவுடன் அங்கிருந்து ஒரு பெரியவரின் உதவியுடன் சைக்கிளில் அங்குள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைப் பார்க்க மிக ஆவலாகப் புறப்பட்டோம்.

முதலில் ஒல்லாந்தர் கோட்டையைப் பார்த்துவிட்டு அங்குள்ள ஆங்கிலேயர் காலத்துப் புறாக் கூடு தொடர்பாக சுவாரஸ்யமான விடயங்களை அந்த பெரியவர் கூற அதனைக் கேட்டு உள்வாங்கி சுற்றிவர எங்கும் முருகைப் பாறை கற்களால் வேலிகள் அமைக்கப்பட்டிருந்தது. எமக்கு அது புதிதாகத் தென்பட்டது அது நெடுந்தீவில் வளரும் கல் ஒன்று அதை எடுத்து மக்கள் தங்கள் வீட்டுக்கு வேலி அமைப்பது வழக்கம் அது உறுதியாகவும் இருந்தது. அதன் வடிவமைப்பு ஆச்சரியமூட்டுவதாகவும் நமக்கு இருந்தது ஆங்காங்கே குதிரைகள் நின்றன. அவை ஆங்கிலேயர் காலத்தில் பயன்படுத்திய பின்னர் விட்டுச் சென்ற குதிரைகள் என அந்த பெரியவர் கூறினார். அவர் கூறும் ஒவ்வொரு கதைகளும் மிகவும் சுவாரஸ்யமாகவும் இருந்தன. சற்று களைப்பாறிய பின் சைக்கிளை மிதித்துக் கொண்டு நானும் எனது தோழியும் சகோதனும் அந்த பெரியவருமாக நான்கு சைக்கிளில் பெருக்கு மரத்தை நோக்கிப் புறப்பட ஆரம்பித்தோம். கால் வலி ஒரு பக்கம் என்றாலும் அந்த மரத்தைப் பார்க்க வேண்டும் என்று ஆர்வம் எம்மிலிருந்தது. காட்டுப்பகுதி ஒற்றையடிப் பாதை ஊடாக முட்களுக்கு மத்தியில் மரக்கிளைகள் எம்மை கீறிக் கிழிக்க அதையும் தாண்டி சுமார் நான்கு கிலோமீட்டர் வரை சைக்கிளை மிதித்து ஒரு வழியாக அந்த பெருக்கு மரத்தை வந்தடைந்தோம்.

அதைப் பார்க்கச் சிங்கள சகோதரர்களும் வந்திருந்தனர். அவர்களுடன் சேர்ந்து கொண்டு நாங்கள் கொண்டு சென்ற சிற்றுண்டி உணவுகளை உண்டு பெருக்கு மரத்தில் நுழைந்து வெளியே வந்து அதை ஆச்சரியமாகப் பார்த்துவிட்டு ஒரு மணி நேரம் கழித்து விட்டு வீடு திரும்பினோம். வருகின்ற வழியில் கழுகுக் கூட்டம் ஒரு குட்டையில் குவிந்து நீர் அருந்திக் கொண்டிருந்தது. கொக்குகளும் ஒரு இடத்தில் நின்றன அனைத்தையும் பார்த்து விட்டு மகிழ்ச்சியில் வீடு திரும்பினோம்.

அதன் பின்னர் கடற்கரை காற்றை உணர்ந்த வண்ணம் செக்கச் சிவந்த வானம் சிறுவர்கள் பட்டம் விட்டு குதூகலத்துடன் இருக்கும் காட்சி என்பவற்றைப் பார்த்து விட்டு அங்கிருந்து வர மனமில்லாமல் மாலைப்பொழுதில் வட தாரகையில் ஏறி வந்து பின்னர் பேருந்து எடுத்து எமது ஊரை வந்தடைந்தோம்.

இசைக் காற்றின் ஓசையைப் போல, பரவி உள்ள நெடுந்திவின் அழகையும் இயற்கையின் பரிசுகளையும் உள்ளுணர்வுடன் அணுகும் பொழுது நாம் அதன் கவர்ச்சிக்கு அடிமையாகி விடுவோம். அந்த இனிமையான நெடுந்தீவின் மக்களுக்குக் கலை, இசை, மற்றும் நடனம் ஒரு முக்கிய அம்சமாக உள்ளது. அதன் ஆச்சரியமான பாரம்பரிய கலைகளை எவ்வளவு அதிகமான அமைதியான உணர்வுகளையும் சந்தோசத்தையும் தருகின்றன என்பதை அங்குச் செல்லும் பயணிகள் உணர்ந்து கொள்ளலாம் அது உங்களை ஒரு சுதந்திர கலைஞரின் உலகிற்குக் கொண்டு செல்லும். என்னுடைய நெடுந்தீவு பயணம் என்பது ஒரு உண்மையான சுகம் மருந்து போன்ற அனுபவம் தந்தது. அதன் இயற்கையின் பொக்கிஷங்கள் அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை முறைகள் மற்றும் அவர்களது கலாசார மரபுகள் அந்த பயணத்தை மறக்க முடியாததாக மாற்றியது.



டெல் அவிவ்

# போர்ப் பதற்றம் உச்சம்



லெபனான் மீதான தாக்குதலை நிறுத்தவும் மத்திய கிழக்கில் பதற்றத்தை தவிர்க்கவும்' என்று ஐ.நா. முதல் சர்வதேச அமைப்புகளும், உலக நாடுகளும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தாலும் கூட திங்கட்கிழமை(01) இரவு லெபனான் மீது இஸ்ரேல் தரை வழித் தாக்குதலைத் ஆரம்பித்து விட்டது. லெபனானின் சில குறிப்பிட்டப் பகுதிகளைக் குறிவைத்து தரைவழித் தாக்குதலைத் தொடங்கிவிட்டதை இஸ்ரேல் இராணுவம் உறுதியும் செய்துள்ளது.

இது தொடர்பாக இஸ்ரேல் இராணுவம் தனது அதிகாரபூர்வ எக்ஸ் பக்கத்தில் நீண்ட விளக்கம் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், “இஸ்ரேல் அரசியல் குழுவின் முடிவுக்கு இணங்க, தெற்கு லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பின் இலக்குகள் குறித்த உளவுத்துறை அளித்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில், துல்லியமான இலக்குகளைக் குறிவைத்து, வரையறுக்கப்பட்ட பகுதியில், தரை வழித் தாக்குதல்களை இஸ்ரேல் இராணுவம் ஆரம்பித்துள்ளது. இந்த இலக்குகள் இஸ்ரேலின் எல்லைக்கு அருகில் உள்ள கிராமங்களில் அமைந்துள்ளன. இவை வடக்கு இஸ்ரேலில் உள்ள இஸ்ரேலிய மக்களுக்கு நீண்டகால அச்சுறுத்தலாக உள்ளன.

இந்தத் தரைவழித் தாக்குதலில் அண்மையில் இராணுவப் பயிற்சி அளித்து தயார்படுத்தப்பட்ட வீரர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர். இஸேரலிய விமானப்படை மற்றும் பீரங்கிப் படைகள் களத்தில் இராணுவ வீரர்களுக்கு பக்கபலமாக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான்



## ஜப்பானின் புதிய பிரதமர் ஷிகெரு இஷிபா தெரிவு


ஜப்பானின் புதிய பிரமராக ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைவரான ஷிகெரு இஷிபா அந்நாட்டு பாராளுமன்றத்தினால் முறைப்படி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதுவரை பிரதமராக இருந்துவந்த ஃபுமியோ கிஷிடோ பதவி விலகியதையடுத்து, இஷிபாவை கட்சித் தலைவராக ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சி வெள்ளிக்கிழமை (27) தேர்ந்தெடுத்தது.

இதையடுத்து, அவர் நாட்டின் அடுத்த பிரதமராக அறிவிக்கப்பட்டிருந்தார். செவ்வாய்க்கிழமை (01) அந்நாட்டு பாராளுமன்றினால் அவர் முறைப்படி பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

கனடா

## குழந்தை பிறப்பு வீதம் வீழ்ச்சி



கனேடிய புள்ளி விபரவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள தகவலின் பிரகாரம், கனடாவில் குழந்தை பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக நாட்டில் குழந்தை பிறப்பு வீதம் வீழ்ச்சி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


கனடாவில் அதிக அளவு குழந்தை பிறப்பு வீதம் வீழ்ச்சி அடைந்த மாகாணமாக பிரிட்டிஷ் கொலம்பியா கருதப்படுகின்றது. கடந்த 2022 மற்றும் 2023 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் குழந்தை பிறப்பு வீதம் வீழ்ச்சி அடைந்துள்ளது.

உலகில் குழந்தை பிறப்பு வீதம் குறைந்த நாடுகளின் வரிசையில் கனடா இணைந்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தென்கொரியா, ஸ்பெயின், இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளும் இந்த வரிசையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பொருளாதார காரணிகளினால் இவ்வாறு குழந்தை பிறப்பு தொடர்பில் இளம் தலைமுறையினர் கூடுதல் சவால்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

திருத்தணி

# தாலி கட்டும் நேரத்தில் மாயமான காதலன்

### கரம்பிடிக்க காதலி போராட்டம்



தமிழகத்தின் ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணத்தை சேர்ந்த பொறியியல் பட்டதாரியான ஸ்ரீதர் (29). பெங்களூரில் உள்ள ஒரு நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வரும் இவர், அதே நிறுவனத்தில் பணியாற்றி வரும் பெங்களூரைச் சேர்ந்த அனுசியா(29) என்பவரை கடந்த 4 ஆண்டுகளாக காதலித்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில், இரு குடும்பத்தினரும் இணைந்து காதல் ஜோடிக்கு திருமணம் செய்து வைக்க முடிவு செய்து, திருத்தணியில் உள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில் கடந்த 15ஆம் திகதி திருமண ஏற்பாடுகள் நடைபெற்றது. இந்நிலையில், தாலி கட்டவிருந்த நேரத்தில் மணமகன் ஸ்ரீதர் திருமண மண்டபத்திலிருந்து மாயமானார்.

இதன் பின்னர் சாதியை காரணம் காட்டி மணமகன் ஸ்ரீதர் மாயமானதாக பொலிஸ் நிலைத்தில் அனுசியா புகார் அளித்தார்.

அனுசியா அளித்த புகாரின் பேரில், வழக்குப்பதிவு செய்த பொலிஸார், மாயமான ஸ்ரீதரை தேடி வந்தனர். இந்நிலையில், கடந்த 4 நாட்களுக்கு முன்பு பெங்களூரில் தங்கியிருந்த ஸ்ரீதரை தனிப்படை பொலிஸார், கண்டுபிடித்து திருத்தணிக்கு அழைத்து வந்தனர். இருவரும் திருமணம் செய்துகொள்ள சம்மதித்தனர். இதனையடுத்து, பொலிஸார் இருவரையும் வீட்டிற்கு அனுப்பி வைத்தனர்.

ஆனால், அனுசியாவை திருமணம் செய்துகொள்ள விருப்பம் இல்லாத ஸ்ரீதர், மறுநாளே மீண்டும் மாயமானது தெரியவந்தது. இதனைத்தொடர்ந்து, தனக்கு நீதி கிடைக்க பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் அனுசியா கேட்டுக் கொண்டார்.

காதலுடன் திருமணம் செய்து வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் மறுத்தால் அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். காதலனை திருமணம் செய்ய இளம்பெண் 16 நாட்களாக போராடி வரும் சம்பவம் திருத்தணியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை

### மருத்துவமனையில் இருந்து

# வீடு திரும்பினார் ரஜினி



மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்ட நடிகர் ரஜினிகாந்த், சிகிச்சையை முடிந்து செவ்வாய்க்கிழமை(1) வீடு திரும்பிவிட்டதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏற்கெனவே திட்டமிடப்பட்ட மருத்துவ பரிசோதனைக்காகவே நடிகர் ரஜினிகாந்த் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக தகவல் வெளியானது. பரிசோதனைக்காக இதய சிகிச்சை நிபுணரிடம் அனுமதி கேட்டிருப்பதாகவும் செவ்வாய்க்கிழமை(1) காலை 6 மணியளவில் பரிசோதனை நடைபெறும் என்றும் கூறப்பட்ட நிலையில், சிகிச்சை முடிந்து வீடு திரும்பி விட்டதாக கூறப்படுகின்றது. அதேவேளை, “ரஜினிகாந்த் விரைந்து நலம்பெற விழைகிறேன்” என தமிழக முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருக்கிறார்.




### பங்களாதேஷுக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றிய இந்தியா

பங்களாதேஷுக்கெதிரான டெஸ்ட் தொடரை இந்தியா கைப்பற்றியது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்றிருந்த இந்தியா, கான்பூரில் வெள்ளிக்கிழமை (27) தொடங்கி செவ்வாய்க்கிழமை (01) முடிவுக்கு வந்த இப்போட்டியையும் வென்றதன் மூலம் 2-0 என்ற ரீதியில் தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

பங்களாதேஷ்: 233/10 (துடுப்பாட்டம்: மொமினுல் ஹக் ஆ.இ 107, நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 31, ஷட்மன் இஸ்லம் 24, மெஹிடி ஹஸன் மிராஸ் 20 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜஸ்பிரிட் பும்ரா 3/50, ஆகாஸ் டீப் 2/43, இரவிச்சந்திரன் அஷ்வின் 2/45, மொஹமட் சிராஜ் 2/57, இரவீந்திர ஜடேஜா 1/28)

இந்தியா: 285/9 (துடுப்பாட்டம்: யஷஸ்வி ஜைஸ்வால் 72, லோகேஷ் ராகுல் 68, விராட் கோலி 47, ஷுப்மன் கில் 39, றோஹித் ஷர்மா 23 ஓட்டங்கள். பந்துவீச்சு: மெஹிடி ஹஸன் மிராஸ் 4/41, ஷகிப் அல் ஹஸன் 4/78, ஹஸன் மஹ்மூட் 1/66)

பங்களாதேஷ்: 146/10 (துடுப்பாட்டம்: ஷட்மன் இஸ்லாம் 50, முஷ்பிக்கூர் ரஹீம் 37 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜஸ்பிரிட் பும்ரா 3/17, இரவீந்திர ஜடேஜா 3/34, இரவிச்சந்திரன் அஷ்வின் 3/50, ஆகாஷ் டீப் 1/20)

இந்தியா: 98/3 (துடுப்பாட்டம்: யஷஸ்வி ஜைஸ்வால் 51, விராட் கோலி ஆ.இ 29 ஓட்டங்கள். பந்துவீச்சு: மெஹிடி ஹஸன் மிராஸ் 2/44, தஜியுல் இஸ்லாம் 1/36)

போட்டியின் நாயகன்: யஷஸ்வி ஜைஸ்வால்

தொடரின் நாயகன்: இரவிச்சந்திரன் அஷ்வின்.

### நிந்தவூர் அரபா வி.க. தொடர்

## இணைச் சம்பியனானது முஸ்தகீன் ஹிக்மா



அஸ்கர் இப்றாஹீம்

நிந்தவூர் அரபா விளையாட்டுக் கழகம் நடாத்திய கிரிக்கெட் 20-20 சம்பியன்ஷிப் தொடரில் சீரற்ற வானிலை காரணமாக நிந்தவூர் முஸ்தகீன் விளையாட்டுக் கழகமும், நிந்தவூர் ஹிக்மா விளையாட்டுக் கழகமும் இணைச் சம்பியனாக தெரிவாகின.

### தேசிய மட்ட பளு தூக்கலில்

## திருமலை மாணவிகள் பிரகாசிப்பு

ஹஸ்பர் ஏ.எச்




பொலன்னறுவையில் வெள்ளிக்கிழமை (27) நடைபெற்ற பாடசாலை களுக்கிடையிலான தேசிய மட்ட பளு தூக்கலில் 17 வயதுப் பிரிவின் கீழ் திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவி சி. கிசோத்திகா முதலாமிடத்தையும், 20 வயதுப் பிரிவின் கீழ் திருகோணமலை / சாம்பல்தீவு மகா வித்தியாலய மாணவி சி. கதுர்சிகா இரண்டாமித்தையும்,/ சண்முகா மாணவி வி.பிரீசா மூன்றாமித்தையும் பெற்று பாடசாலைக்கும் திருகோணமலைக்கும் பெருமை தேடிக் கொடுத்துள்ளனர்.

இம்மாணவிளை கே.உமா சுதன் திறம்பட பயிற்றுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பங்களாதேஷ் தொடருக்கான

## தென்னாபிரிக்கக் குழாம் அறிவிப்பு




பங்களாதேஷ் டெஸ்ட் தொடருக்கான தென்னாபிரிக்கக் குழாமில் சகலதுறைவீரர் செனுரன் முத்துசாமி இடம்பெற்றுள்ளார்.

தவிர டெஸ்ட் குழாமில் முதற்தடவையாக துடுப்பாட்டவீரர் மத்தியூ பிரெட்ஸ்கே இடம்பெற்றுள்ளார்.

குழாமில் லுங்கி என்கிடி, அன்றிச் நொர்கியா, மார்கோ ஜன்சன், ஜெரால்ட் கொயட்ஸி ஆகியோர் இடம்பெறவில்லை.

குழாம்: தெம்பா பவுமா (அணித்தலைவர்), டேவிட் பெடிங்ஹாம், மத்தியூ பிரெட்ஸ்கே, நன்ட்ரே பேர்கர், டொனி டி ஸொர்ஸி, கேஷவ் மஹராஜ், ஏய்டன் மார்க்ரம், வியான் முல்டர், செனுரன் முத்துசாமி, டேன் பற்றர்சன், டேன் பீடிட், ககிஸோ றபாடா, ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ், றயான் றிகெல்டன் (விக்கெட் காப்பாளர்), கைல் வெரைன் (விக்கெட் காப்பாளர்).



# ஓய்வு பெற்ற கிறீஸ்மன்

சர்வதேச கால்பந்தாட்டத்திலிருந்து தனது ஓய்வை பிரான்ஸின் முன்களவீரரான அந்தோனி கிறீஸ்மன் அறிவித்துள்ளார்.

பிரான்ஸுக்காக 137 போட்டிகளில் விளையாடிய 33 வயதான கிறீஸ்மன் 44 கோல்களைப் பெற்றதோடு 2018ஆம் ஆண்டு சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளன உலகக் கிண்ணத்தை பிரான்ஸ் வெல்ல உதவியதுடன், 2021ஆம் ஆண்டு ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்க ஒன்றிய தேசங்களுக்கான லீக் தொடரையும் பிரான்ஸுடன் கிறீஸ்மன் வென்றிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 02, ஒக்டோபர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.